# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 570/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | ராஜேந்திரன் |
| Father’s / Husband Name | : | **உளிகவுண்டர்** |
| Address | : | **வாலிகண்டபுரம்** |
| Age | : | 52/2025 |

**தேதி : 12/11/2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.G. லோகநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் வாலிகண்டபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி அரசால் வெளியே விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட அரசு மதுபான பாட்டில்களை டாஸ்மாக் கடையில் சிறுக, சிறுக வாங்கி அரசு அனுமதியின்றி அதிக லாபத்திற்கு வீட்டில் வைத்து தெரிந்தவர்களிடம் விற்று வந்தார். கடந்த 29.06.2025 ம் தேதி எதிரியை அவர் ் வைத்திருந்த 28 Mclene பிராந்தி பாட்டில்களுடன் மதுவிலக்கு போலீஸார் அவரை கைது செய்து வழக்கு போட்டுள்ளதாக கேள்விபட்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். எதிரியும் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறார். தற்போது திடீர் குப்பத்தில் வீடு கட்டியிருக்கிறார். போலீஸார் விசாரணையில் எதிரி எந்த வீட்டில் பாட்டில் விற்றார் என நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில்

Mclene என்றுதான் சொல்லியுள்ளேன், எத்தனை பாட்டில்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபான கடையில் வாங்கிவந்து விற்றார் என்பதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் எதிரி யார், யாருக்கு விற்றார் என்று பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் முன்னாடி போலீஸார் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனக்கு தெரியாத விஷயத்திற்காக போலீஸாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.